# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 140/ந/2026, நாள் 03.09.2026**

R.மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை. – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை மாவட்டம்.

2) கட்டிட உரிமையாளர்,
கார்த்திக் பல்நோக்கு மருத்துவமனை,சிவகங்கை. – எதிர்மனுதாரர்கள்

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, எண்.5–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி என்பவரின் 24.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.04.2026 அன்று பெறப்பட்டு 140/ந/2026 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, எண்.5–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R. மயில்சாமி என்பவரின் 24.04.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட அரண்மனைவாசல், கதவு எண்.33ல் இயங்கி வரும் கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (side set back) இடைவெளி இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் கார்த்திக் மருத்துவமனை கட்டிடம் இரண்டாயிரம் சதுர அடிக்கு மேல் உள்ளதால், மாவட்ட நகர் ஊரமைப்புதுறையில் திட்ட அனுமதி பெற வேண்டும். ஆனால் திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்திற்கு, உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளின் இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு வாகனம் நிறுத்துமிடம் (car parking) இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது. எனவே சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57ன் கீழ் மூடி

முத்திரையிட்டும் (lock and seal) மற்றும் அகற்றுதல் (removal) போன்ற விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க சிவகங்கை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிட்டும், மேலும் கார்த்திக் மருத்துவமனை கட்டிடம் குறித்து புகார் மனுவை 02.03.2026 தேதியில் சிவகங்கை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அனுப்பி இருந்தும், இதுநாள் வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க தவறிய சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகப்பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1765/2026/எப்1, நாள் 24.06.2026–ல் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அதில்:–

"மனுதாரர் திரு. இரா. மயில்சாமி அவர்கள், சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு D, பிளாக் 10, நகரளவு எண்.141/3ல் அமைந்துள்ள இடத்தில் செயல்பட்டு வரும் கார்த்திக் பல்நோக்கு மருத்துவமனை உரிய பக்க திறவிடங்கள், வாகனம் நிறுத்தும் இடவசதி மற்றும் நகர் ஊரமைப்பு துறையிடம் திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது என புகார் அளித்துள்ளார். மனுதாரர் புகார் மனு பரிசீலிக்கப்பட்டு 10.04.2026 அன்று கார்த்திக் பல்நோக்கு மருத்துவவனை உரிமையாளர் திரு.மணிவண்ணன் அவர்களுக்கு மருத்துவமனை கட்டிடத்திற்கான ஆவணம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்பேரில் சிவகங்கை நகராட்சியில் பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபடம் (கட்டிட அனுமதி எண்.34/2001–2002) பெறப்பட்டுள்ளது. அக்கட்டிட அனுமதியில் குடியிருப்பு என்ற வகைப்பாட்டில் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தற்போது கட்டிடமானது குடியிருப்பு பயன்பாடு இன்றி மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. எனவே 15.05.2026ம் தேதிய இவ்வலுவலக அறிவிப்பு கடிதத்தில் தற்போது மருத்துவமனையாக செயல்பட்டு வருவதால், மருத்துவமனை கட்டிடத்திற்கான விதிகளுக்குட்பட்டு, கட்டிட அமைப்பினை மாற்றி அமைக்கவும் மற்றும் நகர் ஊரமைப்பு துறையிடம் உரிய அனுமதி பெற வேண்டி அறிவுறுத்தப்பட்டு, தொடர் மேல்நடவடிக்கையில் உள்ளது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரரின் மனு குறித்து விசாரணை மேற்கொள்ள மனுதாரர், எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான கார்த்திக் பல்நோக்கு மருத்துவமனை கட்டிட உரிமையாளர் ஆகியோரை 28.07.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு.R.மயில்சாமி 28.07.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார். அதில்:–

"எனது புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள சிவகங்கை கார்த்திக் மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடம் பார்க்கிங் வசதி இல்லாமலும், நான்கு பக்கங்களிலும் திறவிடங்கள் விடாமலும், சட்டத்திற்கு புறம்பாக அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் மூன்று மாடிகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. மேலும் குடியிருப்புக்காக அனுமதி பெறப்பட்டு, வணிக பயன்பாட்டுக்கு மருத்துவமனையாக பயன்படுத்தி வருகின்றனர். வணிக பயன்பாட்டிற்கு நகராட்சியின் அனுமதி உள்ளூர் திட்டக்குழுமத்தில் அனுமதி பெறப்படவில்லை.

எனவே தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும், தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57ன் கீழ் மூடி முத்திரையிட்டு மேற்படி கட்டிடத்தை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.''. என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1765/2026/எப்1, நாள் 27.07.2026ல் தனக்கு மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 தொடர்பான பணிகள், விருதுநகர் துணைக்கண்காணிப்பாளர், கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு அலுவலகத்தில் விசாரணை உள்ள காரணத்தினால், தன்னால் ஆஜராக இயலாத சூழ்நிலை உள்ளது என தெரிவித்து தனது சார்பாக திரு.ச.ராஜ்கமல், நகரமைப்பு ஆய்வர் அவர்கள் 28.07.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகி உரிய ஆவணங்களை சமர்ப்பிப்பார் என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து சிவகங்கை நகராட்சி நகரமைப்பு ஆய்வர் 28.07.2026 அன்று விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.". அதில்:-

"மனுதாரரால் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கார்த்திக் மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இல்லை. முன்பக்க பின்பக்க திறவிடங்கள் விடப்படவில்லை. எனவே தமிழ்நாடு நகர் ஊரமைப்புத்துறை சட்டம், 1971, பிரிவு 56, 57 பிரிவின்படி முறையே 10.04.2026, 15.05.2026 மற்றும் 01.07.2026 ஆகிய தேதிகளில் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது. குடியிருப்பு பயன்பாட்டிற்கு அனுமதி பெற்றுவிட்டு வணிகபயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருகின்றனர். வணிகபயன்பாட்டிற்கு நகராட்சியிடம் அனுமதி பெறப்படவில்லை.

மேலும் மேற்படி கட்டிட உரிமையாளர் அரசிற்கு மேல் முறையீடு செய்துள்ள கடிதத்தின் நகலினை சிவகங்கை நகராட்சிக்கு அனுப்பி அது சிவகங்கை நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி அரசுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80-A ன் கீழ் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கும் மனுவின் உண்மைத்தன்மையினை கண்டறிந்து அதன் விவரத்தை இன்னும் 15 நாட்களுக்குள் மாண்புமிகு முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.". என தெரிவித்துள்ளார்.

7. 2-ம் எதிர்மனுதாரரான கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிட உரிமையாளர் மரு.மணிவண்ணன் தனது 27.07.2026 நாளிட்ட கடிதத்தில் மருத்துவமனையில் தவிர்க்க முடியாத மருத்துவபணி நிமித்தமாக தன்னால் விசாரணைக்கு வர இயலாத காரணத்தினால், தனது தனி உதவியாளர்/மருத்துவமனை நிர்வாக மேலாளர் கா.சரத்குமார் என்பவரை விசாரணைக்கு அனுப்பி வைத்துள்ளேன் என தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து திரு.கா.சரத்குமார் என்பவர் 28.07.2026 அன்று விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"எங்களது மருத்துவமனை கட்டிடத்திற்கு முன்பக்க பின்பக்க திறவிடங்கள் இல்லை. குடியிருப்பு பயன்பாட்டிற்கு அனுமதி பெற்று வணிக பயன்பாடாக மாற்றப்பட்டு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது. எங்களது மருத்துவமனைக்கு நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் வசதி செய்யப்பட்டுள்ளது. அதனுடைய ஒப்பந்தப்பத்திர நகல் இணைத்திருக்கிறேன்.

நாங்கள் எங்களது கட்டிடத்தினை வரைமுறைப்படுத்திக்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971ன் பிரிவு 80-A ன் கீழ் அரசுக்கு 04.07.2026 அன்று மேல் முறையீடு செய்துள்ளோம் என்பதையும் அதற்கான ஒப்புகையும் பெற்று அதனை மாண்புமிகு முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறோம்.

மேற்கண்ட விவரங்களை பணிந்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.''.

8. சிவகங்கை நகராட்சி நகரமைப்பு ஆய்வர் தனது 28.07.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது சமர்ப்பித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு,

சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.1765/2026/எப்1, நாள் 03.08.2026ல் கீழ்க்கண்ட விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அதில்:–

சிவகங்கை நகராட்சி தரப்பு வாதமாக கட்டிட உரிமையாளர் திரு.மணிவண்ணன் அவர்கள் தமிழ்நாடு நகர் ஊரமைப்புத்துறை சட்டம் 80 (A)வின் கீழ், அரசு செயலர் அவர்களுக்கு மேல்முறையீடு கோரி கடிதம் அனுப்பப்பட்டது என அதன் நகலினை சமர்ப்பித்துள்ளார் என்ற விபரமும் அதற்குரிய நகலினையும் எங்கள் தரப்பு ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டிட உரிமையாளர் அவர்களால் அனுப்பப்பட்ட மேல் முறையீட்டு கடிதத்தின் உண்மைத் தன்மையை அறிந்து 15 நாட்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய தங்களால் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க நகரமைப்பு ஆய்வரின் 31.07.2026 நாளிட்ட குறிப்பின்படி, இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு.ச.ராஜ்கமல் அவர்கள் மேற்குறிப்பிட்ட கடிதத்தின் உண்மைத்தன்மையை அறிய கடித நகலின் ஒப்புகைச் சீட்டுடன் தலைமைச் செயலகத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (Tamilnadu Housing and Urban Development Board) அலுவலகத்திற்கு நேரில் சென்று விசாரித்தபோது, மேற்குறிப்பிட்டுள்ள கடிதமானது, தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (Tamilnadu Housing and Urban Development Board) அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது என்ற விபரம் அப்பிரிவு எழுத்தர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிட உரிமையாளரின் சார்பில் ஆஜரான மருத்துவமனை நிர்வாக மேலாளர் மற்றும் தனி உதவியாளரின் வாக்குமூலம், தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட அரண்மனைவாசல், கதவு எண்.33ல் இயங்கி வரும் கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (side set back) இடைவெளி இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், கார்த்திக் மருத்துவமனை கட்டிடம் இரண்டாயிரம் சதுர அடிக்கு மேல் உள்ளதால், மாவட்ட நகர் ஊரமைப்புதுறையில் திட்ட அனுமதி பெற வேண்டும் , ஆனால் திட்ட அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்திற்கு, உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளின் இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு வாகனம் நிறுத்துமிடம் (car parking) இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது எனவும், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்தை தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன்படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57ன் கீழ் மூடி முத்திரையிட்டும் (lock and seal) மற்றும் அகற்றுதல் (removal) போன்ற விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க சிவகங்கை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிட்டும், கார்த்திக் மருத்துவமனை கட்டிடம் குறித்த புகார் மனுவை 02.03.2026 தேதியில் சிவகங்கை நகராட்சி ஆணையருக்கு அனுப்பி இருந்தும், இதுநாள் வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க தவறிய சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யுமாறும் மேற்படி கட்டிடத்தை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இம்முறைமன்ற நடுவத்தை மனுதாரர் கோரியிருப்பதை அவரது மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளர் திரு.மணிவண்ணன் என்பவருக்கு 10.04.2026 அன்று மருத்துவமனை கட்டிடத்திற்கான ஆவணம்

கேட்டு அறிவிப்பு நகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதன்பேரில் நகராட்சி அனுமதி எண்.34/2001–2002 பெறப்பட்டுள்ளது என்பதும், கட்டிட அனுமதியில் குடியிருப்பு என்ற வகைப்பாட்டில் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், தற்போது கட்டிடமானது குடியிருப்பு பயன்பாடு இன்றி மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது என்பதும், 15.05.2026ம் தேதிய நகராட்சி அறிவிப்பு கடிதத்தில் தற்போது மருத்துவமனையாக செயல்பட்டு வருவதால், மருத்துவமனை கட்டிடத்திற்கான விதிகளுக்குட்பட்டு, கட்டிட அமைப்பினை மாற்றி அமைக்கவும், மற்றும் நகர் ஊரமைப்பு துறையிடம் உரிய அனுமதி பெற வேண்டி அறிவுறுத்தப்பட்டு உள்ளது என்பதும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57 பிரிவின்படி முறையே 10.04.2026, 15.05.2026 மற்றும் 01.07.2026 அகிய தேதிகளில் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது என்பதும், கட்டிட உரிமையாளர் அரசுக்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவு 80–அன்கீழ் மேல் முறையீடு செய்துள்ளதன் உண்மைத்தன்மையை அறிய தலைமைச்செயலகத்தில் உள்ள தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (Tamilnadu Housing and Ubran Development Board) அலுவலகத்தில் நேரில் சென்று விசாரித்து, மேற்குறிப்பிட்டுள்ள மேல்முறையீட்டு கடிதமானது தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது என்ற விபரம் அப்பிரிவு எழுத்தர் மூலம் அறியப்பட்டுள்ளது என்பதும், சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

தங்களது மருத்துவமனை கட்டிடத்திற்கு முன்பக்க பின்பக்க திறவிடங்கள் இல்லை எனவும், குடியிருப்பு பயன்பாட்டிற்கு அனுமதி பெற்று வணிக பயன்பாடாக மாற்றப்பட்டு மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது எனவும், தங்களது மருத்துவமனைக்கு நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனம் நிறுத்தும் இடம் வசதி செய்யப்பட்டுள்ளது எனவும், தங்களது கட்டிடத்தினை வரைமுறைப்படுத்திக்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புச்சட்டம், 1971ன் பிரிவு 80–அன்கீழ் அரசுக்கு 04.07.2026 அன்று மேல் முறையீடு செய்துள்ளோம் எனவும் அதற்கான ஒப்புகையும் பெற்று அதனை மாண்புமிகு முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளோம் எனவும் தெரிவித்திருப்பது, 2ம் எதிர்மனுதாரரான கார்த்திக் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை உரிமையாளர் சார்பில் ஆஜரான மருத்துவமனையின் நிர்வாக மேலாளரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

10. இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals.xxx xxx xxx.".

எனவே புகாருக்குள்ளான சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட அரண்மனைவாசல், கதவு எண்.33–ல் இயங்கிவரும் கார்த்திக் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்தினை வரன்முறை செய்ய Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–அன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக இரண்டாம் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையிலும், மேல்முறையீட்டு மனு தமிழ்நாடு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது என்ற விபரம் அப்பிரிவு எழுத்தர் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் சிவகங்கை நகராட்சி ஆணையரால் தனது அறிக்கையில்

தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேல்முறையீட்டு மனு மீது பெறப்படும் அரசு ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சிவகங்கை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ம் ஆண்டு செப்டம்பர், 03–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.R.மயில்சாமி,
எண்.5–A, முதல் மாடி,
அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.

2. நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி, சிவகங்கை.
சிவகங்கை மாவட்டம்.

3. மரு.மணிவண்ணன்,
கட்டிட உரிமையாளர்,
கார்த்திக் பல்நோக்கு மருத்துவமனை,
அரண்மனை வாசல்,
சிவகங்கை – 630 561,
சிவகங்கை மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்:

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.